**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.63/2022**

**Date : 02.06.2025**

**PW3 விஜயா க/பெ. சகாயராஜ்**

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2012-2013, 2013-2014 ஆண்டிற்கான தனிக்கை அறிக்கை யாரிடமிருந்து பெற்றேன் என்றால் சங்கத்தில் இருந்து எடுத்தேன். இனம் 1ல் வரிசை எண். 1 முதல் 7 வரை குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் உள்ள தேதிகளில் அ.சா.ஆ.13 முதல் அ.சா.ஆ.15 வரை ஆவணங்களின் நாள்வழிபேரேட்டில் குறைகள் கண்டறியப்பட்டுள்ளது என்றும் யாரால் கண்டறியப்பட்டது என்றும் எந்த விவரங்களும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இனம் 1 ஐபொறுத்த வரை எவ்வித குறைபாடுகள் இல்லை என்றாலும் சரியல்ல. இனம் 1 ஐ பொறுத்தவரை சங்கத்திற்கு எந்தவித இழப்பீடும் எதிரிகளால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இனம் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்கள் பொறுத்து எந்த ஆவணங்களின்அடிப்படையில் விசாரணை செய்தேன் என்றால் எந்தவித செலவினங்களுக்கு எந்தவித பற்றுசீட்டு மற்றும் வவுட்சர்கள் இல்லை. அதன் அடிப்படையில் விசாரணை செய்தேன்.

என் முதல் விசாரணையில் பற்றுசீட்டு மற்றும் வவுட்சர் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் செலவினங்களை பொறுத்து தனித்தனியே நான்கு இனங்களாக முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். தனிக்கை அறிக்கையின்படி அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை பார்த்து தெரிந்துகொண்டேன். தனிக்கை அறிக்கை 16.12.2015 பின்னிட்டு பெறப்பட்டு ஆய்வு செய்தேன். 2012-2013 ஆண்டிற்கான தனிக்கை அறிக்கை எத்தனை நாட்களுக்குள் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1

மாதத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். இனம் 2ல் 1 முதல் 4 வரையிலான குறைபாடுகள் கண்டறிந்தது சம்மந்தமாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

இனம் 2 ஐ பொறுத்தவரை எவ்வித குறைபாடுகளும் ஏற்படவில்லை என்றாலும், அதன்பொருட்டு சங்கத்திற்கு எவ்வித இழப்பும் எதிரிகளால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நாள்வழிபேரேட்டில் இனம் 3 ஐ பொறுத்தவரை 08.06.2012ம் தேதி ரூ.30,000/- செலவு கணக்கிற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012-2013, 2013-2014 ஆண்டிற்கான வவுட்சர்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ..சா.ஆ.13ல் 07.06.2013 தேதியில் செலவு ரூ.28,406/- என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான வவுட்சர்கள் வாங்கி விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இனம் 2 ஐ பொறுத்தவரை எவ்வித குறைபாடுகளும் ஏற்படவில்லை என்றாலும், நான் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் எதிரிகளின் மீது அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இனம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ள 31.03.2013ல் 1வது எதிரி ரவிச்சந்திரன் சங்க தலைவர் பொறுப்பிலிருந்தாரா என்றால் இல்லை, வனராஜன் தனி அலுவலர் பொறுப்பிலிருந்தார். இனம் 4ல் உள்ள நுகர்பொருள் கடன் ரூ.20, 000/- முறையாகத்தான் பெற்றுள்ளார்கள் என்றாலும், நான் ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் எதிரியின் மீது அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விசாரணை அதிகாரியாக எந்த ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமல் தனிக்கை அறிக்கைக்கு தகுந்தாற்போல் ஆவணங்கள் தாக்கல் செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. இனம் 5ல் இன்சூரன்ஸ் தொகை ரூ.7,000/- சரியாகத்தான் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றாலும், நான் சரியாக ஆவணங்களை பரிசீலனை

செய்யாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இன்சூரன்ஸ் அலுவலகத்தில் தொகை செலுத்தப்படவில்லை.

எதை பார்த்து அதை தெரிந்துகொண்டேன் என்றால் தனிக்கை அறிக்கையில் உள்ள குறைகளை வைத்து தெரிந்துகொண்டேன். இன்சூரன்ஸ் தொகை கட்டியதற்கான ரசீதை 1வது தண்ட தீர்வை செலுத்தும்போது காண்பித்துள்ளார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. நான் விசாரணை செய்தபோது எதிரிகளிடம் இன்சூரன்ஸ் தொகை கட்டியதற்கான ரசீதை கேட்டிருந்தால் கொடுத்திருப்பார்கள் என்றால் நான் விசாரணை செய்தபோது இன்சூரன்ஸ் தொகை கட்டியதற்கான ரசீதை என்னிடம் கொடுக்கவில்லை. அதன்பிறகு கட்டியிருப்பார்கள். இனம் 5 ஐ பொறுத்தவரை எவ்வித குறைபாடுகளும் ஏற்படவில்லை என்றாலும், நான் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் எதிரிகளின் மீது அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இனம் 6ல் மாட்டுத்தீவனம் கொள்முதல் செய்து அதனை சங்க உறுப்பினர்களிடம் விற்பனை செய்வது வழக்கம் என்றால் சரிதான். மாட்டுத்தீவனம் உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்படும் என்றால் சரிதான். மாட்டுத்தீவனம் யார், யாருக்கு கடனாக வழங்கப்பட்டது என்று என்னுடைய விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் யார், யாருக்கு தீவனம் கடனாக வழங்கப்பட்டது என்பதற்கான பதிவேட்டை பராமரிக்கவில்லை. எதிரிகள் சரியாகத்தான் யார், யாருக்கு தீவனம் கடனாக வழங்கப்பட்டது என்பதற்கான பதிவேட்டை பராமரித்து வந்தார்கள் என்றாலும், நான் சரியாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மாட்டுத்தீவனம் விற்பனை செய்வது சங்க தலைவரின் பொறுப்பு என்றால் சரியல்ல. நான் விசாரணை செய்தபோது சங்க தலைவர் அதற்கு பொறுப்பு ஏற்றுகொண்டார் என்றாலும், நான் சங்க செயலாளரின் மீது தவறாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

நான் விசாரணை செய்த காலக்கட்டத்தில் உறுப்பினர்களிடமிருந்து தீவனத்திற்கான நிலுவை தொகை செலுத்தப்படாமல் இருந்தது என்றாலும், அதை பற்றி உறுப்பினர்களிடம் நான் விசாரணை செய்து தெரிந்துகொள்ளாமல் எதிரியின் மீது விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இனம் 6 ஐ பொறுத்தவரை எவ்வித குறைபாடுகளும் ஏற்படவில்லை என்றாலும், நான் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் எதிரிகளின் மீது அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்கங்கள் சம்மந்தமான பேரேடுகள் மற்றும் பதிவேடுகளை அந்தந்த ்சங்கங்கள் வெளியே வாங்கிகொள்ளவேண்டும்.

நான் சொல்வது தவறு என்றாலும், கூட்டுறவு சங்கங்கள் சம்மந்தமான பேரேடுகள் மற்றும் பதிவேடுகள் அரசாங்கத்தால் அச்சடிக்கப்பட்டு சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்என்றால் சரியல்ல. பேரேடுகள் மற்றும் பதிவேடுகள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான தொகையை அந்தந்த சங்கங்கள் பிடித்தம் செய்து திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் அரசு அச்சகத்திற்கு வழங்கப்படும் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.21 மற்றும் அ.சா.ஆ.22 ஆகிய திருச்சிராப்பள்ளி பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் பில்களில் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மேற்படி பில்களை வெளியே தயார்செய்ய முடியும் என்றால் முடியாது. அ.சா.ஆ.27 ஆவணத்தில் 2012 ஆண்டிற்கான மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் 4 மாதத்திற்கான வரவு, செலவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த மாதங்களில் வரவு எதுவும் இருந்திருக்காது.

அ.சா.ஆ.27 ல் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நெய் கொள்முதல் செய்ததற்கான பில் அ.சா.ஆ.20ல் இல்லை என்றால் அது கேஷ் புக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும். இனம் 7ல் கண்டவாறு முறைகேடு எதுவும நடைபெறவில்லை என்றாலும், முறைகேடு நடந்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில தாக்கல் செய்திருப்பேன் என்றாலும்,

நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யாததால் நான் சொல்வதுபோல் முறைகேடு நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் சங்கத்திற்கு எந்தவித நிதிஇழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.26ல் வங்கியின் பெயரோ, வங்கி கணக்கு எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இனம் 8ல் ரூபாய் இரண்டாயிரம் முன்பணம் எடுத்ததாக எவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் முன்பணம் எடுக்கும்போது அவருடைய சம்பள பதிவேட்டில் முன்பணம் எடுத்தது குறித்து வரவு வைக்கவில்லை. சம்பள பதிவேட்டை என்னுடைய விசாரணையின்போது பார்வையிட்டேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முன்பணம் என்றால் என்னவென்று தெரியுமா என்றால் முன்பணம் எடுத்துக்கொண்டு மாதமாதம் சம்பளத்தில் பிடித்தம் செய்துகொள்வது. சங்கத்திற்கு செலவிற்கு தொகை இல்லாதபோது சங்க நிர்வாகி தான் கையிலிருக்கும் பணத்தை செலவு செய்து பின்னிட்டு அதனை சங்க தொகையிலிருந்து பெற்றுக்கொள்வதைத்தான் முன்பணம் என்று சொல்வார்கள் என்றால் சரியல்ல.

முன்பணம் வாபஸ் செய்யப்பட்டது என்று நாள்வழிப்பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. ◌் இனம் 8ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சங்கத்திற்கு எவ்வித நிதி இழப்பும் ஏற்படவில்லை என்றாலும், ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் எதிரியின் மீது விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. சங்கத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகை கொடுக்கப்படும் என்றால் சரிதான். சங்கத்தில் ஊக்கத்தொகை எதன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்றால் சங்கத்தின் லாபத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும். மாவட்ட துணை பதிவாளர் அவர்கள் ஊக்கத்தொகை கொடுப்பது குறித்து உத்தரவு கொடுப்பார். அதன் அடிப்படையில்தான் சங்கத்தில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஊக்கத்தொகை பெற்ற எத்தனை உறுப்பினர்களை நான் விசாரித்தேன் என்றால் யாரையும் விசாரிக்கவில்லை. ஊக்கத்தொகை முறையாக சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றாலும், அதன் ஆவணங்களை விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது என்றாலும், அதனை அவர்கள் அலுவலகத்தில் தொலைத்துவிட்டதால் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்களை நாங்கள் தொலைத்துவிட்டு எதிரியின் மீது தவறு இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த இனத்திலும் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும், சரியாக விசாரணை செய்யாமல் விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யாமல் ஆவணங்களை பின்னிட்டு தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எந்த ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமல் அறிக்கை தயார் செய்தும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தனி அறிக்கை சட்டப்படி ஏற்ககூடியதல்ல என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2வது சுப்பிரமணியன் அரியலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் துணை பதிவாளராக பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். நூத்தப்பூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் தனி அலுவலராக கூடுதல் பொறுப்பு அலுவலராக பணியில் இருந்தார் என்றால் சரிதான். ஒரே பால்வழிதடத்தில்தான் கூடுதல் பொறுப்பு அலுவலரை தனி அலுவலராக நியமிப்பார் என்றால் சரிதான். முறைகேடு நடந்ததாக சொல்லப்படும் கால ஆண்டில் மூன்று மாத காலம் மட்டுமே தனி அலுவலராக 2வது எதிரி பணிபுரிந்தார் என்றால் சரிதான். முறைகேடு சம்மந்தப்பட்ட ஆவணங்களை

யாரிடமிருந்து கைப்பற்றினேன் என்றால் சங்க செயலாளரிடமிருந்து கைப்பற்றினேன்.

மேற்படி சங்க செயலாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களுக்கு ரசீது கொடுத்தேனா என்றால் இல்லை. 1வது எதிரி என்னிடம் வாக்குமூலம் கொடுத்தபோது 2வது எதிரி குற்றம் செய்வதற்கு உடன்தையாக இருந்தார் என்று என்னிடம் 1வது எதிரி வாக்குமூலம் கொடுக்கவில்லை. குற்றம் நடைபெற்றதாக சொல்லப்படும் காலத்திற்கு பிறகு 2வது எதிரி மாவட்ட துணை பதிவாளராக பணி உயர்வு பெற்றுதான் பணி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். இரண்டாவது எதிரிக்கு எதிராக இந்த வழக்கு தவிர வேறு எந்த வழக்கும் இல்லை என்றால் சரிதான். நான் எதிரிகளை சரியாக விசாரணை செய்யாமல் சாட்சிகளையும், சான்றாவணங்களையும் ஆய்வு செய்யாமல் பொய்யாக எதிரிகளின் மீது விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும்,இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. 14.06.2012க்கு பிறகு இரண்டாவது எதிரி தனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று விடுப்பில் சென்றுவிட்டார் என்றால் சரிதான்.

<u>3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.